# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 396/மா/2025**

**நாள்: 30.06.2026**

| | | |
|---|---|---|
| பா. ரவி,<br>சென்னை–44 | --- | முறையீட்டு மனுதாரர் |
| ஆணையர்<br>தாம்பரம் மாநகராட்சி | --- | எதிர்மனுதாரர் |

சென்னை–600 044, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது குறுக்குத் தெரு, கதவு எண் 99/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. ரவி என்பவரின் 22.11.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.11.2025 அன்று பெறப்பட்டு 396/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, மும்மூர்த்தி நகர், 5வது குறுக்குத் தெரு, கதவு எண் 99/1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. பா. ரவி என்பவர் தனது 22.11.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர், 5 தெருக்களை உள்ளடக்கியதாகும். சுமார் 200 வீட்டு உரிமையாளர்கள் சொந்த வீடுகளைக் கட்டி வசித்து வருகிறார்கள். பல்லவபுரம் நகராட்சி சார்பில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு மும்மூர்த்தி நகரில் பாதாள சாக்கடை திட்டம் (Underground Drainage System) செயல்படுத்தப்பட்டது.

மோசமான திட்டமிடல் மற்றும் கட்டமைப்பின் காரணமாக மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களிலும் தினம்தோறும் கழிவுநீரானது குழாய்களில் தடையின்றி செல்லாமல் தேங்கி அதன் காரணமாக manhole–கள் நிரம்பி மல ஜலம் கலந்த கழிவுநீரானது மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் வழிந்தோடியபடி இருக்கிறது.

படு மோசமான திட்டமிடல் மற்றும் கட்டமைப்பை மறைத்திடும் விதமாக தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–2 பொறியியல் பிரிவு உயரதிகாரிகள், "மழை காரணமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து விட்டது. நிலத்தடி நீரானது பாதாள சாக்கடை சிமெண்ட் குழாய்களில் ஊறி அதன் விளைவாக மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக

அமைந்திருக்கும் இரு manhole–களும் நிரம்பி மல ஜலம் கலந்த கழிவு நீரானது தெருவில் நிரம்பி வழிவதாக'' காரணம் கூறி வருகிறார்கள்.

மழைக்காலம் என்றில்லாமல் வருடத்தின் அனைத்து நாட்களிலும் மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களும் நிரம்பி மல ஜலம் கலந்த கழிவுநீரானது தெருவில் வழிந்தோடுவது வாடிக்கையாக இருந்து வருகிறது.

மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களின் கட்டமைப்பு ரீதியிலான (underlying structural issue) பிரச்சனைகளை சரியாக அடையாளம் கண்டு அதை சரி செய்தால் மாத்திரமே இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண முடியும்.

வருடத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கான கட்டணமாக ரூ.1600/– மும்மூர்த்தி நகரை சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் தாம்பரம் மாநகராட்சிக்கு செலுத்தி வருகிறோம்.

பாதாள சாக்கடைக்கான கட்டணத்தையும் செலுத்திவிட்டு, பாதாள சாக்கடை manhole–கள் வழியாக நிரம்பி தெருவில் வழிந்தோடும் மல ஜலம் கலந்த கழிவுநீர் மத்தியிலும் வாழ வேண்டிய அவல நிலைக்கு மும்மூர்த்தி நகரை சேர்ந்த வீட்டு உரிமையாளர்களான எங்களை ஆளாக்கியிருக்கிறது தாம்பரம் மாநகராட்சி.

மும்மூர்த்தி நகருக்கு பக்கத்தில் அமைந்திருக்கும் பிற பகுதிகளை சேர்ந்த நூற்றுக் கணக்கான பொது மக்களும், பள்ளி குழந்தைகளும் மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டை போக்குவரத்திற்காக அன்றாடம் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் தினம்தோறும் வழிந்தோடும் மல ஜலம் கலந்து கழிவுநீரில் தான் அவர்கள் நடந்து செல்ல வேண்டியிருக்கிறது.

இதன் காரணமாக பொது மக்களும் பள்ளிக் குழந்தைகளும் சுகாதார கேடுகளை சந்தித்தபடி இருக்கிறார்கள். மேலும் அருகிலிருக்கும் வீட்டில் வசிப்பவர்களும் கடுமையான துர்நாற்றம் வீசக் கூடிய காற்றை சுவாசிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாகி வருகிறார்கள்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து நிரந்தர தீர்வு வழங்கிட கடந்த டிசம்பர் 26, 2024 (26–12–2024) அன்று தாம்பரம் மாநகராட்சி Zone–2, உதவிப் பொறியாளர் அவர்களுக்கும், நகராட்சிகள் இயக்குநர் அவர்களுக்கும் மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் புகார் அளித்தும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களுக்கு இடையே நிலவும் கட்டமைப்பு ரீதியிலான (underlying structural issue) பிரச்சனையை சரி செய்து இப்பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு கண்டிட உரிய உத்தரவு பிறப்பித்திடும்படி, மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 01.12.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளர் தனது 27.02.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:–

"தாம்பரம் மாநகராட்சியானது 5 நகராட்சிகளையும் 5 பேரூராட்சிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் பல்லாவரம் நகராட்சி 42 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது. அப்போதைய மக்கள் தொகை 2,15,452–க்கு ஏற்ப ரூ.75.33 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டு சுமார் 159.74 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள், 6006 எண்ணிக்கையில் இயந்திர நுழைவு குழிகள் மற்றும் 9 இடங்களில் பிரதான மற்றும் துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு கடந்த 14 ஆண்டுகளாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மனுதாரர் தெரிவித்துள்ள பகுதிகளை ஒருங்கிணைத்து அன்னை இந்திரா நகர் பகுதியில் துணை கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகள் சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால், நகர பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றப்பட்டு அதிகபடியான கழிவுநீர் மேற்படி துணை கழிவுநீர் உந்து நிலையத்திற்கு பெறப்படுகிறது. இதனால் மழைகாலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சேர்ந்து வருவதாலும், மும்மூர்த்தி நகர் 1 முதல் 5வது தெரு வரை உள்ள பகுதிகள் மிகவும் தாழ்வான பகுதியாக வீரராகவன் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் அமைந்துள்ளதாலும், ஏற்கனவே, வடிவமைக்கப்பட்ட கழிவுநீர் கிணறுகள் அனைத்தும் நிரம்பி வடியாத நிலை மழைகாலங்களில் மட்டும் நிலவி வருகிறது. இதனை மறுசீரமைக்க மாநகராட்சி ரூ.120.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் நிதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி பெறப்பட்டவுடன் கூடுதலாக கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு நிரந்தர தீர்வு காணப்படும் என இதன் மூலம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.".

4. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர், 5 தெருக்களை உள்ளடக்கியதாகும். சுமார் 200 வீட்டு உரிமையாளர்கள் சொந்த வீடுகளைக் கட்டி வசித்து வருகிறார்கள். பல்லவபுரம் நகராட்சி சார்பில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு மும்மூர்த்தி நகரில் பாதாள சாக்கடை திட்டம் (Underground Drainage System) செயல்படுத்தப்பட்டது.

மோசமான திட்டமிடல் மற்றும் கட்டமைப்பின் காரணமாக மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களிலும் தினம்தோறும் கழிவுநீரானது குழாய்களில் தடையின்றி செல்லாமல் தேங்கி manhole–கள் நிரம்பி மல ஜலம் கலந்த கழிவுநீரானது மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் வழிந்தோடியபடி வருடந்தோறும் இருக்கிறது.

வருடத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கான கட்டணமாக ரூ.1800/– மும்மூர்த்தி நகரை சேர்ந்த சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களும் தாம்பரம் மாநகராட்சிக்கு செலுத்தி வருகிறோம்.

மும்மூர்த்தி நகருக்கு பக்கத்தில் அமைந்திருக்கும் பிற பகுதிகளை சேர்ந்த நூற்றுக் கணக்கான பொது மக்களும், பள்ளி குழந்தைகளும் மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டை போக்குவரத்திற்காக அன்றாடம் பயன்படுத்தி வருகிறார்கள். இந்நிலையில் மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் தினம்தோறும் வழிந்தோடுவதால் பொது மக்களும் பள்ளிக் குழந்தைகளும் சுகாதார கேடுகளை சந்தித்தபடி இருக்கிறார்கள். மேலும் அருகிலிருக்கும் வீட்டில் வசிப்பவர்களும் கடுமையான துர்நாற்றம் வீசக் கூடிய காற்றை சுவாசிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாகி வருகிறார்கள்.

மேற்கண்ட புகார் தொடர்பாக பல மனுக்கள் அளித்தும் தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் தாம்பரம் மாநகராட்சியிலிருந்து எந்தவித அதிகாரியும் கள ஆய்வு செய்யவில்லை. ஆனால், Brokerகள் புகார் அளித்தால் தாம்பரம் மாநகராட்சியில் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறார்கள்.

எங்கள் பகுதி நீர்நிலை பகுதி என்று தாம்பரம் மாநகராட்சி தெரிவித்ததை நான் மறுக்கிறேன். மேலும் மழைகாலங்களில் மட்டும் இல்லாமல் சாதாரண நாட்களிலும் கழிவு நீர் வடிந்து ஓடுகிறது. இரண்டு நாட்களுக்கு முன்பும் கழிவு நீர் தெருவில் வழிந்து ஓடியது.

எனவே, மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களுக்கு இடையே நிலவும் கட்டமைப்பு ரீதியிலான (underlying structural issue) பிரச்சனையை சரி செய்யுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''

6. எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் மின்கம்பி உதவியாளர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

''தாம்பரம் மாநகராட்சியானது 5 நகராட்சிகளையும் 5 பேரூராட்சிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நிலையில் பல்லாவரம் நகராட்சி 42 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது. அப்போதைய மக்கள் தொகை 2,15,452–க்கு ஏற்ப ரூ.75.33 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டு சுமார் 159.74 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள், 6006 எண்ணிக்கையில் இயந்திர நுழைவு குழிகள் மற்றும் 9 இடங்களில் பிரதான மற்றும் துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு கடந்த 14 ஆண்டுகளாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இந்நிலையில் மனுதாரர் தெரிவித்துள்ள பகுதிகளை ஒருங்கிணைத்து அன்னை இந்திரா நகர் பகுதியில் துணை கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகள் சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால், நகர பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றப்பட்டு அதிகபடியான கழிவுநீர் மேற்படி துணை கழிவுநீர் உந்து நிலையத்திற்கு பெறப்படுகிறது. இதனால் மழைகாலங்களில் மழைநீர் மற்றும்

கழிவுநீர் சேர்ந்து வருவதாலும், மும்மூர்த்தி நகர் 1 முதல் 5வது தெரு வரை உள்ள பகுதிகள் மிகவும் தாழ்வான பகுதியாக வீரராகவன் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் அமைந்துள்ளதால் இதனை மறுசீரமைக்க மாநகராட்சி ரூ.120.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் நிதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி பெறப்பட்டவுடன் கூடுதலாக கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு நிரந்தர தீர்வு காணப்படும்.

மேலும், மேற்கண்ட பகுதியில் மூம்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5வது தெருவுக்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் கழிவு நீர் வெளியேறும் போது தாம்பரம் மாநகராட்சியால் பணியாளர்களை கொண்டு அவற்றை சீர் செய்யப்படுகிறது. மேலும், தாம்பரம் மாநகராட்சியால் நிரந்தர தீர்வு காணும்வரை வாரத்திற்கு ஒரு முறை மேற்கண்ட பாதாள சாக்கடையினை தூர் வாரி கழிவு நீர் தெருவில் செல்லாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.''.

7 முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை, தாம்பரம் மாநகராட்சியின் மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் மின்கம்பி உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–2, வார்டு 28–ல் அமைந்திருக்கும் மும்மூர்த்தி நகர், 5 தெருக்களை உள்ளடக்கி சுமார் 200 வீட்டு உரிமையாளர்கள் சொந்த வீடுகளைக் கட்டி வசித்து வரும், இத்தெருக்களில் பல்லவபுரம் நகராட்சி சார்பில் கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு பாதாள சாக்கடை திட்டம் (Underground Drainage System) செயல்படுத்தப்பட்டது என்பதும், மோசமான திட்டமிடல் மற்றும் கட்டமைப்பின் காரணமாக மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களிலும் தினம்தோறும் கழிவுநீரானது குழாய்களில் தடையின்றி செல்லாமல் தேங்கி manhole–கள் நிரம்பி மல ஜலம் கலந்த கழிவுநீரானது மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் வழிந்தோடியபடி எப்போதும் உள்ளது என்பதும், பாதாள சாக்கடை திட்டத்திற்கான கட்டணமாக ஆண்டிற்கு ரூ.1800/–ஐ தாம்பரம் மாநகராட்சிக்கு செலுத்தப்படுகிறது என்பதும், மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் தினம்தோறும் வழிந்தோடுவதால், இம்மெயின் ரோட்டை போக்குவரத்திற்காக அன்றாடம் பயன்படுத்தும் பொது மக்களும் பள்ளிக் குழந்தைகளும் சுகாதார கேடுகளை சந்திக்கிறார்கள் என்பதும், அருகிலிருக்கும் வீட்டில் வசிப்பவர்களும் கடுமையான துர்நாற்றம் வீசக் கூடிய காற்றை சுவாசிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாகி வருவதாகவும், இது தொடர்பாக பல புகார் மனுக்கள் அளித்தும் தாம்பரம் மாநகராட்சியால் எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், ஆனால், Brokerகள் புகார் அளித்தால் தாம்பரம் மாநகராட்சியில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதும், இப்பகுதியானது நீர்நிலை பகுதி என்று தாம்பரம் மாநகராட்சியால் தெரிவித்ததை மறுப்பதாகவும், மழைகாலங்களில் மட்டும் இல்லாமல் சாதாரண நாட்களிலும் கழிவு நீர் வழிந்து ஓடுகிறது என்பதும், எனவே, மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5–வது தெருவிற்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களுக்கு இடையே நிலவும் கட்டமைப்பு ரீதியிலான (underlying structural issue) பிரச்சனையை சரி செய்யுமாறு தாம்பரம் மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மும்மூர்த்தி நகர் வீட்டு உரிமையாளர்கள் சங்கம் சார்பில் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

தாம்பரம் மாநகராட்சியானது 5 நகராட்சிகளையும் 5 பேரூராட்சிகளையும் ஒருங்கிணைத்து மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது என்பதும், பல்லாவரம் நகராட்சி 42 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாக இருந்தது என்பதும், அப்போதைய மக்கள் தொகை 2,15,452–க்கு ஏற்ப ரூ.75.33 கோடி திட்ட மதிப்பீட்டில் திட்டம் வடிவமைக்கப்பட்டு சுமார் 159.74 கி.மீ. நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள், 6006 எண்ணிக்கையில் இயந்திர நுழைவு குழிகள் மற்றும் 9 இடங்களில் பிரதான மற்றும் துணை கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைக்கப்பட்டு கடந்த 14 ஆண்டுகளாக பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதும், மனுதாரர் தெரிவித்துள்ள பகுதிகளை ஒருங்கிணைத்து அன்னை இந்திரா நகர் பகுதியில் துணை கழிவுநீர் உந்து நிலையம் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதும், தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட பல்லாவரம், குரோம்பேட்டை ஆகிய பகுதிகள் சென்னையை ஒட்டி அமைந்துள்ளதால், நகர பகுதி விரிவாக்கம் செய்யப்பட்டு அடுக்குமாடி குடியிருப்புகளாக மாற்றப்பட்டு அதிகபடியான கழிவுநீர் மேற்படி துணை கழிவுநீர் உந்து நிலையத்திற்கு பெறப்படுவதால், மழைக்காலங்களில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சேர்ந்து வருவதாலும், மும்மூர்த்தி நகர் 1 முதல் 5வது தெரு வரை உள்ள பகுதிகள் மிகவும் தாழ்வான பகுதியாக வீரராகவன் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் அமைந்துள்ளதால் இதனை மறுசீரமைக்க மாநகராட்சி ரூ.120.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் நிதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், நிதி பெறப்பட்டவுடன் கூடுதலாக கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு நிரந்தர தீர்வு காணப்படும் என்பதும், மேற்கண்ட பகுதியில் மூம்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5வது தெருவுக்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் கழிவு நீர் வெளியேறும் போது தாம்பரம் மாநகராட்சியால் பணியாளர்களை கொண்டு அவற்றை சீர் செய்யப்படுகிறது என்பதும், தாம்பரம் மாநகராட்சியால் நிரந்தர தீர்வு காணும்வரை வாரத்திற்கு ஒரு முறை மேற்கண்ட பாதாள சாக்கடையினை தூர் வாரி கழிவு நீர் தெருவில் செல்லாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் மின்கம்பி உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள மும்மூர்த்தி நகர் 1 முதல் 5வது தெரு வரை உள்ள பகுதிகள் மிகவும் தாழ்வான பகுதியாக வீரராகவன் ஏரியின் நீர்ப்பிடிப்பு பகுதியில் அமைந்துள்ளதால் இதனை மறுசீரமைக்க மாநகராட்சி ரூ.120.00 கோடியில் திட்ட மதிப்பீடு தயார் செய்து அரசின் நிதி வேண்டி பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால், நிதி கிடைக்கப் பெற்றவுடன் கூடுதலாக கழிவுநீர் கிணறுகள் அமைக்கப்பட்டு நிரந்தர தீர்வு காணப்படும் என்றும், மூம்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5வது தெருவுக்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் கழிவு நீர் வெளியேறும் போது தாம்பரம் மாநகராட்சியால் பணியாளர்களை கொண்டு அவற்றை சீர் செய்யப்படுகிறது என்றும், தாம்பரம் மாநகராட்சியால் நிரந்தர தீர்வு காணும்வரை வாரத்திற்கு ஒரு முறை மேற்கண்ட பாதாள சாக்கடையினை தூர் வாரி கழிவு நீர் தெருவில் செல்லாமல் இருக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவிப் பொறியாளர் மற்றும் மின்கம்பி உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மூம்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5வது தெருவுக்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் இருந்து கழிவு நீர் தெருவில் செல்லாமல் இருக்க தாம்பரம் மாநகராட்சி தூய்மை பணியாளர்களைக் கொண்டு அடிக்கடி தூர் வாருவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிக்குமாறும் மற்றும் மும்மூர்த்தி நகர் 1 முதல் 5வது தெரு வரை உள்ள பகுதிகளை ரூ.120.00 கோடி திட்ட மதிப்பீட்டில் மறுசீரமைக்க அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை குறித்து நிதி பெறுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து மேற்கண்ட பகுதிகளில் கூடுதலாக கழிவுநீர் உந்து நிலையங்கள் அமைத்து நிரந்தர தீர்வு காணுவதற்கு உரிய நடவடிக்கையினை

விரைவில் மேற்கொள்ளுமாறும் மற்றும் அதுவரை மும்மூர்த்தி நகர் மெயின் ரோட்டில் 5வது தெருவுக்கு எதிராக அமைந்திருக்கும் இரு manhole–களில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தேங்கி தெருவில் செல்லாமல் இருப்பதற்கும். அத்தெருக்களின் சுற்றுப்புறம் சுகாதார சீர்கேடு வராமல் இருப்பதற்கும் தாம்பரம் மாநகராட்சி தூய்மை பணியாளர்களைக் கொண்டு மேற்கண்ட பாதாள சாக்கடைகளை அடிக்கடி தூர் வாருவதை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கண்காணிப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. பா. ரவி,
எண் 99/1, 5வது குறுக்குத் தெரு,
மும்மூர்த்தி நகர், குரோம்பேட்டை,
சென்னை–600 044.

(2) ஆணையாளர், தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு, தாம்பரம் மேற்கு,
சென்னை–600 045.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம்–2, தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

3/7/26
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032